## தஷஹ்ஹூ திற்குப்பின் ஸலவாத்து ஓதுதல்

1 أ للّٰهُمَّ صل عَلَى مُحَمَّد، وَعَلَى آل مُحَمَّد ، كَمَا صَلَّيْتَ عَلَى إبْرَاهيمَ،
وَعَلَى آل إبْرَاهيمَ، إنَّكَ حَميد مَجيد. أَللّٰهُمَّ بَارك عَلَى مُحَمَّد، وَعَلَى آل
مُحَمَّد ، كَمَا بَارَكْتَ عَلَى إبْرَاهيمَ، وَعَلَى آل إبْرَاهيمَ، إنَّكَ حَميد مَجيد.

*பொருள்: எங்கள் இறவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் ரஹ்மத்தைப் பொழிந்தவாறு அருள் புரிவாயாக, நிச்சயமாக, நீ புகழுக்குரியவனாகவும் மேன்மை மிக்கவனாவும் இருக்கின்றாய். எங்கள் இறவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் முஹம்மத் ﷺ அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீதும் இப்ராஹீம் (அ) அவர்களுடைய வழிவந்தவர்கள்மீதும் பரக்கத்தை அருளியதுபோன்றே அருள் புரிவாயாக, நிச்சயமாக, நீ புகழுக்குரியவனாகவும் மேன்மை மிக்கவனாவும் இருக்கின்றாய்.*

2 أ للّٰهُمَّ صل عَلَى مُحَمَّد، وَعَلَى أَزْوَاجه، وَذُريَّته كَمَا صَلَّيْتَ عَلَى آل
إبْرَاهيمَ، وَبَارك عَلَى مُحَمَّد، وَعَلَى أَزْوَاجه، وَذُريَّته كَمَا بَارَكْتَ عَلَى آل
إبْرَاهيمَ، إنَّكَ حَميد مَجيد.

*பொருள்: எங்கள் இறவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் அவர்களுடைய மனவையர்கள்மீதும் அவர்களுடைய வழித்தோன்றல்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீது ரஹ்மத்தைப் பொழிந்தவாறு அருள் புரிவாயாக. எங்கள் இறவனே, முஹம்மத் ﷺ அவர்கள்மீதும் அவர்களுடைய மனைவியர்கள்மீதும் அவர்களுடைய வழித்தோன்றல்கள்மீதும் நீ இப்ராஹீம் (அ) அவர்கள்மீது அருள் புரிந்தது போன்றே அருள் புரிவாயாக. நிச்சயமாக, நீ புகழுக்குரியவனாகவும் மேன்மை மிக்கவனாவும் இருக்கின்றாய்.*

* * *